## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 32/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சீதா | மதம் | : |
| க/பெ | : பர்ணபாஸ் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

09.09.2024

<u>வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டிற்காக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கான புல எண் தெரியுமா என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எனவே புல எண் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 11 செண்ட் ஆகும். தாவா சொத்து மற்ற சொத்துக்கள் எல்லாம் என் தாத்தவுக்கு பூர்வீக பாத்தியம் என்றால் எனக்கு அது தெரியாது. என் தாத்தாவின் பெயர் தெரியுமா என்றால் எனக்கு அதுகூட தெரியாது. என் தாத்தாவின் உடன் பிறந்தவர்கள் 4 பேர் என்றால் தெரியாது.

2. அம்மாவாசை, கோளாறு, ரோட்டு குள்ளன், நைனா ஆகியோர் என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் பெயர் என்ன என்றால் பரணபாஸ் ஆகும். என் கணவர் உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். என் கணவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். என் கணவர் நைனாவின் பேரன் என்றால் தெரியாது. என் கணவரின் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பா பெயர் கண்ணாயிரம் ஆகும். ராதா என் அம்மா ஆவார். ராதாவின் தாத்தா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. ராதாவின் தாத்தாதான் ரோட்டு குள்ளன் என்றாலும் நான் தெரிந்துகொண்டே தெரியாது

என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. அந்த வகையில்தான் நானும் என் கணவரும் உறவினர் என்றால் என் கணவர் உறவினர்தான் ஆனால் மற்றவர்கள் யார் என்று தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள யோவான் எனது உறவினர் மற்றும் பங்காளி என்றால் இல்லை. அம்மாவாசையின் பேரன்தான் யோவான் என்றால் தெரியாது. நானும் பிரதிவாதிகளும் ஒரே தாத்தா வழியில் உறவினர்கள் என்றாலும் பிரதிவாதிகளுக்கும் அவர்கள் தாத்தா வழியில் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றாலும் இல்லை. என் தாத்தக்களுக்குள் 40, 50 வருடங்களுக்கு முன்பே வாய் மொழியாக பாகம் ஆகிவிட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த காலத்தில் அது விவசாய நிலமாக இருந்தது என்றால் இல்லை.

4. அதன் பின்பு நிலங்கள் கிராம நத்தமாக மாற்றப்பட்டது என்றால் தெரியாது. அந்த வகையில் புல எண்.84/12 மொத்த விஸ்தீரணம் 12 செண்ட் என்றால் தவறு. அந்த 12 செண்ட்டை அம்மாவாசை, கோளாறு, ரோட்டு குள்ளன் ஆகியோர் தலா 4 செண்ட்டாக பிரித்து கொண்டனர் என்றால் இல்லை. புல எண்.84/13, 14, 15 ஆகியவை மேற்படி பாகத்தில் நைனாவுக்கு கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. கோளாறுவின் பேரனான சாமுவேலிடமிருந்து அவரது பங்கான 4 செண்ட்டை யோவான் கிரையம் பெற்று மொத்தம் 8 செண்ட்டை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை.

5. யோவான் அந்த இடத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் ஓட்டு வீடு கட்டியுள்ளார். மீதியுள்ள இடத்தில் குப்பைகூளம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. நான்தான் அனுபவித்து வருகிறேன். எனக்கு ரோட்டுக்கு அருகில் ஒரு குடிசை வீடுதான் உள்ளது என்றால் தொகுப்பு வீடும் உள்ளது. நான் செப்டிக் டாங் கட்டியிருந்தேன். செப்டிக் டாங் மீதே காம்பௌண்ட் சுவர் கட்டி பிரதிவாதி ஓடு இறக்கியுள்ளார். நான் நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். அந்த அறிக்கையிலும் ஒரே ஒரு குடிசை வீடு இருப்பதாகதான் ஆணையர் சொல்லியுள்ளார் என்றால் தொகுப்பு வீடும் உள்ளது.

6. பட்டா யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் என் கணவருக்கு கொடுக்கப்பட்டது. எந்த வருடம் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் 1994 ஆகும். எவ்வளவுக்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் 11 செண்ட்க்கு கொடுத்தார்கள். பட்டா கொடுத்த விவரம் பிரதிவாதிக்கு தெரிய வந்து பிரதிவாதி பட்டாவை ரத்து செய்து மனு செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதி அ.வ.எண்.27/2019 என முதலில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதி எதற்கு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அத்துமீறி வீடு கட்டினார். நாங்கள் பிரச்சனை செய்தோம். எனவே வழக்கு தாக்கல் செய்தார். நான் வழியை விடமாட்டேன் என பிரச்சனை செய்ததால் தான் பிரதிவாதி என் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அவர்களுக்கு அங்கு வழியே கிடையாது.

7. பிரதிவாதி 2019 ல் வழக்கு தாக்கல் செய்வதற்கு 2 வருடங்களுக்கு முன்பே வீடு கட்டிவிட்டார் என்றால் 2008 லேயே வீடு கட்டிவிட்டார். பிரதிவாதி வீடு கட்டிய தேதியில் இருந்து அந்த வழியாகதான் பிரதிவாதிகள் சென்று வருகிறார்கள் என்றும் நான் அப்போது எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும் நான் பிரச்சனைதான் செய்து வருகிறேன். என் கணவர் இருந்த வரை எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும் என் கணவர் இறந்த பின்பு நானும் என் குழந்தைகளும் பிரச்சனை செய்ததால்தான் அ.வ.எண்.27/2019 பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. பிரதிவாதி வீட்டை அனுபவிப்பதற்காக வீட்டு வரி, மின் கட்டணம் ஆகியவை செலுத்தி பிரதிவாதிதான் தாவா சொத்தை இன்று வரை அனுபவித்து வருகிறார் என்றால் அவர் அனுபவிக்கவில்லை.

8. என் கணவர் இறந்த பின்பு என் குழந்தைகள் எனக்கு அக்குவிடுதலை ஆவணமான வா.சா.ஆ 7 எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ 7 ஆன அக்கு விடுதலை ஆவணத்தை பிரதிவாதிகளை ஏமாற்றி மோசடி செய்ய வேண்டி எங்களுக்கு பாத்தியம் இல்லாத சொத்தை பொறுத்து பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் பெயரில் பட்டா கொடுத்தது செல்லாது என பிரதிவாதிகள் கொடுத்த மனு உரிமையியல்

வழக்கு நிலுவையில் உள்ளதால் அம்மனுவும் நிலுவையில் உள்ளது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லாது என்றாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் பிரதிவாதிகள் தாக்கல் செய்த அ.வ.எண்.24/2019 தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(6 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)